அலங்கார அரசியல்வாதிகளால் அவனி பாழ்படுகிறது!

சர்வதேச அரசியல் என்பது சந்தைக்கடை வியாபாரமே!

உலக மனிதனின் எதிர்காலம் ஊசலாடுகிறது!

நாட்டு மக்களின் நலிவு தீர வழியில்லை

குறிஞ்சிப்பாடி மாநாட்டில் தோழர் பூ. கணேசன் அவர்களின் துவக்கவுரை

"உலக நாடுகளனைத்தையும் ஒரு குடைக்கீழ்க் கொணர வேண்டும்; அப்படி ஒன்று சேர்ந்த நாடுகளின் வளத்தை—வாழ்வை—உரிமையை—இன்னும் எவ்வளவு—அவையனைத்தையும் சுரண்டி, சுகபோகத்திலாழவேண்டும்—அதே நேரத்தில் முதலாளித்வ யதேச்சதிகாரம் முனைப்புப்பெற்று சிரஞ்சீவியாய்த் திகழ்ந்து வரல்வேண்டுமென்ற பத்தாம் பசலிக் கொள்கையைப் பகட்டாக மனதிற்கொண்டு—தங்களது மனோரத வெற்றியோட்டத்துக்கான வெறியாட்டங்களிலெல்லாம். மேற்கத்திய வல்லரசுகள் ஈடுபட்டு வருவதைக் காண்கிறோம். முதலாளித்துவ வல்லரசுகள் கூலசென்சோடு சுரண்டல் திருவிளையாடல்கள் நடத்த அமைக்கப்பெற்ற அனுமதி நிலையமாகிய ஐ. நா. ஸ்தாபனம் இன்று ஆட்டங்கொடுத்து அழிவை நோக்கி விரைவதையுணர்கிறோம்."

"பண பலத்தால்—ஏகாதிபத்திய இச்சகவுரைகளால் உலகையே மடக்கிக் கொள்ளலாமெனக் கருதி—திட்டம் போட்டு—செயலிலிறங்கிய ஆங்கில—அமெரிக்க வல்லரசுகள் இன்று ஐ. நாவைப் பழைய சர்வதேச சங்கமாக்கி விட்டதோடு—வேண்டாத வேதனைச் சுழலில் சிக்கிக் கொண்டதை உண்மை நடப்பு எடுத்துக் காட்டி வருகிறது. சர்வதேச அரசியல் இவ்வண்ணம் சந்தைக்கடை வியாபாரமாகி விட்டதை—சழக்கர்களின் சட்டலாட்டக்கூடமாகி விட்டதை யார்தான் மறுக்க முடியுமெனக் கேட்கிறேன்." என்று தோழர் பூ. கணேசன் அவர்கள் தமது துவக்க உரையில் குறிப்பிட்டார். அவர் மேலும் கூறுகையில்;—

தோழர்களே!

தென்னார்க்காடு பெருங்குடி மக்கள் பெருவாரியாகத் திரண்டு நிற்கும் இம்மாபெரும் மாநாட்டைத் துவக்கும் பொறுப்பையும், பெருமையும் எளியேனுக்களித்த தங்களுக்கு எனது உளமார்ந்த நன்றியும், வணக்கமும். இப்பொறுப்பினை ஏற்று நிறைவேற்ற என்னிலுஞ் சிறந்த நுண்ணறிவாளர்-செயல் திறன் படைத்தோர் பற்பலர் உளரென்பதை உணர்ந்திருக்கிறேனாயினும், மாநாட்டமைப்பாளர்களின் மட்டிலன்புக் கட்டளையை மறுக்காதேற்றேன். நினைவு தெரிந்தகால முதற்கொண்டே அறிவியக்கத்தைப் பற்றுக்கோடாகக் கொண்டு, அது காட்டிய வழியெல்லாம் ஏறி பிறங்கிவரும் எண்ணற்ற இளைஞர் படை வரிசையில் இணைந்து நிற்கும் யான், கொண்ட கோட்பாடும், விழைந்து நிற்கும் லட்சியமும் நிறைவேறி, நற்பயனளிப்பதற்கான நல்லதொருதொண்டில் இயன்றதொரு பகுதியைத் தகுந்ததொரு முறையில் ஏற்க வேண்டுமெனும் கடமையுணர்ச்சி யுந்தியதால் தான் இசைந்தேன்; ஈண்டு வந்தேன். இம்மாநாட்டை இத்துணைச் சிறப்புடன் ஏற்பாடு செய்த தென்னார்க்காடு கழகத் தோழர்களைப் பாராட்டுகிறேன்! தென்னாட்டின் பல்வேறு மாவட்டங்களிலும் முரசு கொட்டிவரும் முன்னேற்றக் கழகம் நாளுக்கு நாள் பெற்று வரும் ஏற்றத்துக்குத் தென்னார்க்காடு முற்போக்காளரின் மங்கா வுணர்ச்சியும், சலியாத் தொண்டும் பெருத்த அளவில் துணை செய்யுமெனப் பெரிதும் நம்புகிறேன்.

உலகைப் போர்ப் பாதைக்கு இழுக்கும் இரு முகாம்கள்

தோழர்களே! ஆயிரக்கணக்கில் இங்கு நாம் கூடியுள்ளோம். இது ஆளவந்தாருக்கும் ஆளுங் கட்சியாருக்கும் ஏக்கந்தரத்தக்கது மட்டுமல்ல; அறிவுலகுக்கு— மறுமலர்ச்சி சகாப்தத்துக்கு—உண்மைச் சமாதானம் விழையும் உருகும் உள்ளங்களுக்கு உண்மையாகவே உணர்வும், உற்சாகமும், ஊக்கமும், ஆக்கமும் அளிக்கக்கூடியதுமாகும். நண்பர்களே! உலகம் எப்படி எங்கு எதை நோக்கிச் சென்று கொண்டிருக்கிறதென்பதை நாம் நாள்தோறும், ஏன் மணிதோறும் அறிந்து வருகிறோம். இலட்சியக் கோட்பாட்டை முன் வைத்து, உலகம் இரு வேறு கூறுகளாகப் பிரிந்து விட்டதையும், ஒவ்வொரு கூறும்மற்றொருகூறை விழுங்க வெளிப்படையாகத் திட்டமிட்டுவருவதையும்— ஆனால் அதே நேரத்தில் ஒரு கூறுமட்டும் நாள்தோறும் இன்னொரு கூறை சிறுகச்சிறுகக் கரைந்து வருவதையும், கண் முன்னில்

(தொடர்ச்சி 4ம் பக்கம் பார்க்க)

Phone No 4502
விலை அரை அணா

Regd. No. M. 5458
இலங்கை 5 சதம்

மாலை மணி

ஆசிரியர்: C.N. அண்ணாதுரை M.A.

MALAI MANI

(திராவிடர் தமிழ்த் தினசரி - கருத்திதழ்)

மலர் 1] சென்னை (13—3—50) வெளியூர் (14—3—50) [இதழ் 192

செஞ்சீனாவில் பொருளாதார நெருக்கடி வலுக்கிறது?

போர்மோஸாவைக் கைப்பற்ற மாசே துங்கின் மும்முரம்

ஹாங் ஹாங், மார்ச். 12—

செஞ்சீனாவில் பொருளாதார நெருக்கடி தீவிரமாக வலுத்து வருவதால், போர்மோஸாவை விரைவில் கைப்பற்ற மாஸேதுங் இருக்கிறார் என்று கூறப்படுகிறது.

கம்யூனிஸ்ட் சீனாவின் இந்த நெருக்கடித் தீர வேண்டுமென்றால், கடல் முற்றுகை நீக்கப்பட வேண்டும் என்பதுடன், சியாங் விமானங்கள் சீன நகர்கள் மீது குண்டு வீசுவதை நிறுத்த வேண்டும் என்றும் மாஸே துங் அபிப்பிராயப்படுகிறார்.

கால நிலையை அனுசரித்தால் அடுத்து மூன்று மாதங்கள்தான் போர் மோஸா படை யெடுப்புக்கு ஏற்ற சமயம் என்று கூறப்படுகிறது.

போர் மோஸாவைத் தாக்க வேண்டுமென்றால், சுமார் 100 மைல் கடல் பரப்பைக் கம்யூனிஸ்டு படைகள் தாண்ட வேண்டும். கம்யூனிஸ்டுகளிடமுள்ள கடற்படையை விட சியாங்கிடம் பலமான கடற்படை இருப்பதாகக் கூறப்படுகிறது. சியாங்கின் விமான பலமும் அதிகரித்து வருவது நிரூபிக்கப்பட்டுவருகிறது. இப்பொழுதுள்ள நிலைமை சியாங்கிற்கே சாதகமாக இருப்பதாகத் தெரிகிறது.

சோவியத் தேர்தல்

மாஸ்கோ, மார்ச் 12—

சோவியத் பாராளும் மன்ற உறுப்பினர் தேர்தல் காலை ஆரம்பமாகும். மொத்தம் தேர்ந்தெடுக்கப்பட வேண்டிய உறுப்பினர் தொகை 1302. பல லட்சக்கணக்கான மக்கள் வாக்களிப்பார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது. தோழர் ஸ்டாலின் ஒரு அபேஷகராக நிற்பார்.

பெர்லினைக் கைப்பற்ற கம்யூனிஸ்ட் இளைஞர் இயக்கம்

பெர்லின், மார்ச். 12—

மே மாதக் கடைசியில் பெர்லினைக் கைப்பற்ற கம்யூனிஸ்ட் இளைஞர்கள் திட்டம்போட்டிருப்பதாகவும், இது அத்துமீறி போவதற்கு முன் தடுக்கப் போதிய போலீஸ் குழுப்புகளை உதவிக்கு அனுப்ப ஏற்பாடுகள் மும்முரமாக நடைபெறுகின்றனவென்றும் கூறப்படுகிறது.

ஊர்வலங்களைக் கலைக்க மேற்கு ஜெர்மன் போலீஸ் பயிற்சியளிக்கப்பட்டிருப்பதுடன், கண்ணீர்புகை, வெடிகளும் சேர்க்கப்பட்டிருக்கின்றனவென்றும் தெரிகிறது.

தெ. கி. ஆசியா சம்பந்தமாக அமெரிக்காவின் புது தீவிரக் கொள்கை

—————(0)—————

ஜெஸ்ஸப் ரிப்போர்ட்டை கேட்டபின் உருவாகலாம்

வாஷிங்டன், மார்ச். 12—

யுனைடெட்ஸ்டேட்ஸ் சர்வதேச ஸ்தானீகர் டாக்டர் ஜெஸ்ஸப் சுமார் 14 நாடுகளில் சுற்றுப்பிரயாணம் செய்துவிட்டு, வாஷிங்டன் திரும்பியிருக்கிறார். இவரிடமிருந்து ரிப்போர்ட்டை கேட்ட பின்பு யுனைடெட்ஸ்டேட்ஸ் சர்க்கார் தென்கிழக்கு ஆசியா விஷயமாக புதுத் தீவிரக் கொள்கையைப் பின்பற்றலாம் என்று கூறப்படுகிறது.

இந்தோ-சீனா இப்பிரதேச பிரச்னைக்கு மிகவும் முக்கியமானதென்பதை, அமெரிக்கா நன்று தெரிந்து கொண்டிருப்பதாகக் கூறப்படுகிறது.

வியட்னாமில் ஹோசிமினுக்கு உதவியாக ரஷ்யாப் படையெடுத்தால், யுனைடெட் ஸ்டேட்ஸை யுத்தத்தில் இழுப்பதாக ஆகும் என்று, பொறுப்புள்ள வட்டாரங்களில் கூறப்பட்டது வாஷிங்டனில் இன்னும் மறுக்கப்படவில்லை.

அணுசக்தி பற்றிய சமரசப் பேச்சுக்கு ரஷ்யா தயார்

அமெரிக்காதான் சந்தேகிக்கிறது

லண்டன், மார்ச். 12—

அணுசக்திக் கட்டுப்பாடு சம்பந்தமான சமரசப் பேச்சுகளுக்கு ரஷ்யா தயார் என்று, மாஸ்கோ செய்திகள் அறிவித்திருந்தபோதிலும் அமெரிக்கர்கள் ரஷ்யா எதற்கும் இணங்கி வராதென்றே அவநம்பிக்கையுடன் இருக்கின்றனர்.

சமரசப் பேச்சு நடத்த இணங்குவதன் மூலம், உலக மக்களிடையே அனுவசிய நம்பிக்கையை ஏற்படுத்துவதாக ஆகும் என்றும், இதனால் ரஷ்யாவிற்கே தான் நன்மை ஏற்படும் என்றும் யுனைடெட் ஸ்டேட்ஸ் ராஜாங்க மந்திரி அகீஸன் சமீபத்தில் கூறியிருப்பதை அமெரிக்கர்கள் எடுத்துக்காட்டி, இந்த முயற்சியினால் பலன் இல்லை என்கின்றனர்.

மலேயா கலகக்காரர்கள் சுறுசுறுப்பு

லண்டன், மார்ச். 12—

மலேயாவில் கலகக்காரர்களை ஒழிக்க எடுக்கப்பட்டுள்ள தீவிர நடவடிக்கைகளைத் தொடர்ந்து, கலகக்காரர்களும் மும்முரமாக நடவடிக்கை எடுக்க ஆரம்பித்திருப்பதாகத் தெரிகிறது.

எவ்வளவுக்கெவ்வளவு அதிகமாக கலகக்காரர்கள் கொல்லப்பட்டும், கைது செய்யப்பட்டும் வருகின்றனரோ அவ்வளவுக்கவ்வளவு கலகக்காரர்கள் அதிகமாகத் தங்கள் பலத்தைப் பெருக்கி வருகின்றனர் என்று 'ஸ்டிரெய்ட்ஸ் டைம்ஸ்' பத்திரிகை கூறுகிறது. கலகப்படையினரின் பக்கத்தில் சுமார் 5000 பேர் இருக்கலாம் என்று கூறப்படுகிறது. கலகப்படையினர் மிகவும் தீவிரமான முறை கையாளும் சக்தியும் வருவதாகவும் கூறப்படுகிறது.

சியாங்கை கடத்திச் சென்றவர் தூக்கிலிடப்பட்டார்

ஹாங்ஹாங், மார்ச். 12—

1936ல் சியாங்கேஷேக்கைக் கடத்திச்சென்றதாகக் கூறப்படும் மார்ஷல் செங் ஷாங் லியாங் தைவானில் சென்ற வருஷம் நவம்பர் மாதம் 11ந்தேதி தூக்கிலிடப்பட்டதாக இப்பொழுது செய்தி பிரசுரிக்கப்பட்டிருக்கிறது. இவருக்கு சியாங்கைக் கடத்திச்செல்ல உதவி செய்த ஜெனரல் யாங்ஹுசெங்கையும் சியாங்கை கைவிட்டபோது சியாங் ஆட்கள் தூக்கிலிட்டுவிட்டதாகக் கூறப்படுகிறது.

மாலை மணி

சென்னை 13—3—50 திங்கட்கிழமை

அட்டை ஆட்சி!

"விற்பனைவரி 'காமதேனு' அல்ல என்றும் 'ரத்தம் உறிஞ்சும் அட்டை' என்றும் கூறப்பட்டது. அவ்விதமே இருக்கட்டும், அவ்விதமிருந்த போதிலும், அந்த 'அட்டை'யைப் பாதுகாப்பதும் அவசியம். கலால் வருமானத்தை வேண்டுமென்றே விட்டுவிட்டோம். இதற்கெல்லாம் ஈடு செய்ய இந்த 'அட்டை' அவசியம்" என்று 'அட்டை'யின் துணை கொண்டு ஆளவந்திருக்கும் அமைச்சர் குழுவின் பிரதிநிதி தோழர் பி. கோபாலர், சென்னை மேல் சபைக் கூட்டத்தில் விதந்தோதியுள்ளார்,

தோழர் கோபாலர் அவர்களால் புகழ்ந்து கூறப்படும் அந்த 'விற்பனை வரி அட்டை' 1938-ல் ரூ 1 கோடிதான் உறிஞ்சி வந்தது. இப்பொழுது அந்த 'அட்டை' ரூ 15½ கோடியை உறிஞ்சுகிறது. இந்த 'அட்டை'யின் உறிஞ்சுதலால் அவதிப்படுபவர்கள், இந்நாட்டின் ஏழை மக்கள்—வறியவர்கள்-பாட்டாளிகள் — தொழிலாளி ஆகியவர்களாகத்தானிருக்கிறார்கள். பணக்காரர்கள்—முதலாளிகளுக்கு இதன் உறிஞ்சுதல், அதிகமாகத் தெரிவதில்லை, தெரியவும் வழியில்லை! ஆனால் தோழர் கோபாலர் கூறுகிறார், இந்த 'அட்டை' நியாயமான முறையில் வளர்க்கப்படுகிறது என்றும், ஏழை—பணக்காரர் எல்லோரையும் ஒரேவிதமாகத்தான் உறிஞ்சி வருகிறது என்றும், நியாயவாதம் பேசி நிற்கிறார்! இந்த 'அட்டை' உறிஞ்சுவதற்கு ஏழையின் உடலில் போதுமான 'இரத்தம்' இல்லையே என்று எடுத்துக்கூறினால், இப்படி 'இரத்தத்தை' உறிஞ்சுவதைத் தவிர வேறு வழியில்லை, என்று கை விரிக்கிறார், சென்னை நிதி அமைச்சர்.

"அவரவர்கள் வாங்குவதைப் பொறுத்தே இந்த வரி கொடுக்கப்படுகிறது. ஆகவே இது நியாயமான வரி" என்று வாதிடுகிறார் நிதிமந்திரியார். உயிர்வாழ்வதற்கு இன்றியமையாப் பொருள்களை யெல்லாம் வாங்கியே வாழவேண்டும் என்ற நிலையிலிருக்கும் ஏழை மக்கள்தானே, இந்த வரியைப் பெருவாரியாகக் கொடுக்க வேண்டியவராகிறார்கள். இன்றைய ஆளவந்தார்கள் வளர்க்கும் 'அட்டை' ஏழை மக்களைத்தானா எல்லாவகையிலும் உறிஞ்சவேண்டும்? பணக்காரர்களை மட்டும் உறிஞ்சும் 'அட்டை'கள் இந்த ஆளவந்தார்கள் கண்களுக்குப் புலப்படவில்லையா?

இந்த 'அட்டை' போதுமான அளவுக்கு இரத்தத்தை உறிஞ்சிவிட்டு, விட்டுவிடும் என்று சொல்வதற்குக் கூட வழியில்லை. ஏன் என்றால் "இந்த வரி நீடித்து இருக்க வேண்டும்; இருக்கப்போகிறது" என்று உறுதியுடன் தெரிவிக்கிறார் மந்திரியார்.

ஏழை மக்கள் மீது ஏற்றப்பட்டிருக்கும் வரிச்சுமைகள், அவர்களால் தாங்க முடியாதனவாகி விட்டதால், அவற்றைக் குறைக்க வேண்டும் என்று நேரிய உள்ளம் படைத்த மேல் சபை உறுப்பினர்கள் சிலர் எடுத்துக்கூறினர். அதற்கு மாற்றம் கூறுமுகத்தான், தோழர் பி. கோபாலர் அவர்கள் பதில் கூறும்போது தான், 'விற்பனைவரி அட்டை'யின் அவசியத்தை வற்புறுத்தியுள்ளார் அசோகச்சக்கரத்தின் கீழ்தான் 'அட்டை ஆட்சி' புரிகிறது!

இந்த 'அட்டை'யை வளர்க்க வேண்டிய அவசியம் ஏற்பட்டதற்குக் காரணம், மத்திய யூனியன் அரசாங்கம் ஏராளமான வரி வருமானங்களைக் கொண்டு சென்று விடுகிறது. ஆகவேதான், சென்னை மாநிலத்திற்கு அவதிநிலை ஏற்படுகிறது என்பதைத் தோழர் கோபாலர் சொல்லாமற் சொல்லி விளங்க வைக்கிறார். நாட்டின் பொருளாதார—அரசியல் நிலைகளை நன்கு ஆராய்ந்து, மத்திய ஆட்சி மாகாணத்தை அடிமைப் படுத்தியுள்ளது, அந்த நிலை அகற்றப்பட்டு மாகாணம்—அதாவது திராவிடம் தன்னாட்சி செலுத்த ஆரம்பித்தால்தான், இந்த அவலநிலை நீங்க வழி ஏற்படும் என்பதை நாம் பல காலமாக வற்புறுத்தி வருகிறோம். அதன் உண்மையைத் தோழர் கோபாலர் உணர்கிறார் இப்பொழுது. ஆனால் நன்னிலை காணுவதற்கான திட்டம் தீட்ட இன்னமும் அவருக்குத் திடம் பிறக்கவில்லை; நாம் தீட்டிக்காட்டும் திட்டத்தை ஏற்றுக்கொள்ளவும் உறுதியில்லை, என் செய்வார்! அவர் இருக்கும் நிலை அப்படி!

"பாமர மக்கள் ஏழை மக்களின் பாதுகாப்பும், நலனும் ராஜ்யங்களின் சர்க்காரைச் சேர்ந்தவை. யூனியன் சர்க்காரைச் சேர்ந்தவை அல்ல. ஆனால் நமது பொறுப்பிற்கேற்ற வரி இனங்கள், வருமானங்கள் இல்லை. அது மட்டுமல்லாமல் சிலவற்றை நம்மிடமிருந்து எடுத்துக்கொண்டு விட்டனர். நான் புகாராகச் சொல்லவில்லை. ஆனால் உள்ளதைச் சொல்லாமலிருக்க முடியாது. இன்னும் சில வரி விதிப்பு இனங்களும் போய்விடப் போகின்றன. இதற்கு மேல் சமீபத்தில் தேஷ்முக் தீர்ப்பு வந்தது."

என்று சென்னை நிதி அமைச்சர் கூறுவதை ஊன்றிப் பார்த்தால், மாகாணத்தை மத்திய ஆட்சி எந்த அளவுக்கு அடிமை கொண்டுவிட்டது என்பது இனிது விளங்கும். வட நாட்டாட்சியின் இறுப்புப் பிடி, திராவிடத்தின் கழுத்தை நாளுக்கு நாள் அழுத்தி வருவதைத் தோழர் கோபாலரின் பேச்சைக் கேட்ட பிறகேனும், திராவிடத்தைச் சேர்ந்த தேசியத் தோழர்கள் உணர்வார்கள் என்று கருதுகிறோம்.

வட நாட்டாட்சியின் ஆதிக்கம் தென்னாட்டில் வலிவடைய வழி வகுத்துக் கொடுத்து விட்டு, அதன் காரணமாக வரி வருமானங்களை வட நாட்டாட்சியிடம் கொட்டச் செய்துவிட்டு, 'அட்டை ஆட்சி' ஆள சென்னை ஆளவந்தார்கள் முற்பட்டிருப்பது வெட்கக்கேடான செயலல்லவா? அவர்களுக்கு வெட்கமோ-துக்கமோ ஏற்படவில்லை, மக்களைப் பற்றிய கவலை இல்லாத காரணத்தால்! 'அட்டை' ஆளுகிறது இரத்தம் இருக்கும் வரையில் அது உறிஞ்சித்தானே தீரும்!

ஸ்டர்லிங் கடன் தீர்க்க..

பிரிட்டனுக்கு கனடா உதவி?

டோரெண்டோ, மார்ச் 12—

டாலர் நெருக்கடியைத் தீர்ப்பதற்கு முதல்படியாக, பிரிட்டனின் ஸ்டர்லிங் கடனைத் தீர்ப்பதில் கனடா சர்க்கார் உதவி செய்ய வேண்டுமென்ற கனடா வர்த்தக சபை யோசனையை, இங்குள்ள நிதி வட்டாரங்கள் பலமாக ஆதரிக்கிறதென்று குளோப் நிருபர் அறிவிக்கிறார்.

பிரிட்டிஷ் அதிகாரிகளை வாபஸ் வாங்குக?

லண்டன், மார்ச், 12—

ஹங்கேரியில் கைதுசெய்யப்பட்டு விசாரணையை எதிர்நோக்கியிருக்கும் வோக்லரும், ஸாண்டர்ஸாம் ஒப்புதல் வாக்குமூலத்தில் பிரிட்டிஷ் ஸ்தானிகாலயத்தைச் சேர்ந்த கர்னல் கொப்ரன், எட்வர்ட் ஸவுத்பி இவர்களைப்பற்றி ஏதோ கூறியிருப்பதாகத் தெரிகிறது. இவ்விருவர்களையும் வாபஸ் பெற வேண்டும் என்று பிரிட்டனை ஹங்கேரிய சர்க்கார் கேட்டிருக்கிறது.

ஹங்கேரியிலுள்ள பிரிட்டிஷ் கௌன்ஸிலையும் மூடிவிட வேண்டும் என்று ஹங்கேரிய சர்க்கார் வற்புறுத்தியிருக்கிறது.

இம்மாதிரி கோரிக்கை அமெரிக்க அதிகாரிகள் விஷயத்திலும் வரும் என்று புடாபெஸ்டிலுள்ள அமெரிக்க ஸ்தானிகாலயம் எதிர்பார்க்கிறது. —குளோப்

மலேயாவில் குடி உரிமைப்பதிவு

கோலாலம்பூர், மார்ச். 12—

மலேயாவில் சென்ற ஆண்டில் 39744 பேர்களுக்குப் பிரஜாஉரிமை வழங்கப்பட்டிருக்கின்றன.

மலேயாவில் 30,00,000 பேர் மக்கட் தொகை இருந்தபோதிலும், மிகவும் குறைவான தொகையினரே பிரஜா உரிமைக்கு மனுச்செய்து கொண்டிருக்கின்றனர். இவர்களும் தாங்கள் மலேயாவின் பிரஜை என்று தெரிவித்துக்கொள்ள ஏற்பட்ட அவசியம் காரணமாகவே மனுவைச் செய்துகொண்டனர் என்று தெரிகிறது.

நியூயார்க் பாங்கியில் பகல் கொள்ளை!

நியூயார்க், மார்ச். 12—

நியூயார்க் பாங்கி ஒன்றில் கொள்ளைக் கூட்டத்தினர் பட்டப்பகலில் புகுந்து, மிகவும் துணிகரமான கொள்ளையை நடத்தியிருக்கின்றனர். இக்கொள்ளைக் கூட்டத் தலைவர் லண்டனில் துணிகர கொள்ளை ஒன்றை நடத்தியவராம்.

பாங்கியின் சிப்பந்திகள் அவ்வளவு பேர்களையும் துப்பாக்கியைக் காட்டியே மிரட்டி ஆயிரக் கணக்கான டாலர் நோட்டுகளை இவர்கள் கவர்ந்து சென்றுவிட்டனராம்.

சேரிகள் முன்னேற்றமே நகர முன்னேற்றம்

தோழர் அந்தோணிப்பிள்ளை கருத்து

சென்னை, மார்ச். 11—

"நகராண்மைக்கழகத்திற்கு உருப்படியானத் திட்டம் எதுவும் இருப்பதாகத் தெரியவில்லை. எடுத்ததற்கெல்லாம் சர்க்கார் கையை எதிர்பார்க்கிறது நகராண்மைக் கழகம். இது கூடாது நகராண்மைக் கழக வருவாயைக் கொண்டே கூடுமான வரை, தேவைகளைப்பூர்த்தி செய்து கொள்ள முயல வேண்டும். நகர பரிபாலன முறையைக் கவனிப்பதற்கே அதிகப்பணம் செலவிடப்பட வேண்டும். சேரிகள் முன்னேற்றத்திற்கே முதலிடம் தரப்பட வேண்டும் தொத்து வியாதிகளைப் போக்கும் திட்டத்திற்காக நகராண்மைக் கழகமே உளவள்ளம் பணத்தைச் செலவிட வேண்டும் என்பது தவறு. இவ்விஷயம் சர்க்காரால் கவனிக்கப்படவேண்டும். நகராண்மைக் கழகத்திற்கு இஃதொரு அதிகப்படியான சுமையாகும் நகராண்மைக் கழகத்தார் சேரி முன்னேற்றத்துக்கென ஒரு ஐந்தாண்டுத் திட்டம் வகுத்து வேலை செய்யவேண்டும்."

என்று சென்னை நகராண்மைக் கழக வரவு-செலவுத் திட்டம்பற்றி நடைபெற்ற விவாதத்தின் போது தோழர் எஸ். ஸி. ஸி. அந்தோணிப்பிள்ளை குறிப்பிட்டார்.

அந்தோணிப்பிள்ளை அவர்கள் குறிப்பிட்டிருப்பது போல், நகராண்மைக் கழகத்தின் முதற்பணி சேரி முன்னேற்றமாகத்தான் இருக்க வேண்டும். சேரிகள் ஒழுங்கு படாத வரை, நகரம், நகரம் என்ற பெயருக்கே பொறுத்த மற்றதாகும்.

அடுத்து, தோழர் பிள்ளை குறிப்பிடுவது போல் சுகாதார செலவனைத்தும் நகராண்மைக்கழகமே மேற்கொள்ளுவது கடினம்தான். அரசியலாரும் இதில் பெரும்பங்கு உதவி செய்தாக வேண்டும் மக்களின் சுக வாழ்வில் நாட்டம்செலுத்த வேண்டுவது அரசியலார் கடனாகும்.

ஆசியாவிலேயே நாகரீகம் அதிகம்

லண்டன், மார்ச். 11—

உலகத்தைச் சுற்றி 20,000 மைல் சுற்றுப் பிரயாணம் செய்த ஜான்வாய்ட் என்கிற ஹாம்டன் பள்ளிக்கூட உபாத்தியாயர் ஐரோப்பாவைவிட ஆசியாவில் நாகரீகம் முதிர்ந்திருக்கிறது என்றும் ஆசியாவில் உடலைவிட ஆத்மாவுக்கு முதலிடம் கொடுக்கப்படுகிறதென்றும் ஆனால் ஐரோப்பாவில் உடலுக்கே முக்கியத்துவம் அளிக்கப்படுகிறதென்றும் கூறினார்.

வகுப்புவாத ஒழிப்பு மாநாடு!

புதுடில்லி, மார்ச். 10—

அகில இந்திய வகுப்புவாத ஒழிப்பு மாநாடு பாடியாலாவில் பஞ்சாப் மாகாண காங்கிரஸ்கமிட்டி முன்னாள் தலைவர் டாக்டர் இச்சிறுவின் தலைமையில் இப்பொழுது நடைபெற்று வருகிறது.

இந்தியாவில் வகுப்பு ஒற்றுமை ஏற்படுத்துவதற்கான வழிகளை ஏற்படுத்துவதே இம்மாநாட்டின் நோக்கம். இந்தியாவின் பல பாகங்களிலிருந்து சுமார் 100 முஸ்லிம்கள் இம்மாநாட்டில் கலந்துகொள்கிறார்கள்.

மலேயாவுக்குப் புது முஸ்லிம் கல்லூரி

கோலாலம்பூர், மார்ச். 12—

மலேயாவில் ரூ. 750,000 செலவில் ஆரம்பிக்கப்படவிருக்கும் முஸ்லிம் கல்லூரிக்குத் தாராளமாக நிதி உதவும்படி மலேயாவிலுள்ள முஸ்லிம்களுக்கு அகில மலேயா முஸ்லிம் மிஷனரி சொஸைட்டி தலைவர் அல்ஸாகாப் கேட்டுக்கொண்டிருக்கிறார். —குளோப்

பஞ்சாபுக்குப் புதிய தலைநகர்

புதுடில்லி, மார்ச். 12—

பஞ்சாப் ராஜாங்கத்தின் புது தலைநகர்நிர்மாணவேலை, மே மாதம் மூன்றாவது வாரத்தில் ஆரம்பமாகும் எனத் தெரிகிறது.

சாந்தர் என்ற இடத்தில் 10500 ஜனத்தொகை கொண்ட 14 கிராமங்கள் இப்புது தலைநகர் திட்டத்தில் சேர்ந்துவிடும் எனத் தெரிகிறது.

பர்மாவின் புது இறக்குமதி கொள்கை

லைசன்ஸ் கட்டணத்தில் குறைவு

ரங்கூன், மார்ச். 11—

பர்மிய பிரதமர் தாக்கின்நு பர்மாவின் புது இறக்குமதி கொள்கையை அறிவித்திருக்கிறார்.

இறக்குமதி லைசென்சுகள் ரூ. 35 கோடியிலிருந்து ரூ 25 கோடி குறைக்கப்பட்டிருக்கிறது. வர்த்தக சமூகத்தை உற்சாகப்படுத்தவும் விலைவாசிகளை இறங்கும்படி செய்யவும் இறக்குமதி கொள்கை மாற்றி அமைக்கப்பட்டிருக்கிறதென்றும் எல்லா வியாபாரிகளுக்கும் சரிசம சந்தர்ப்பம் கிடைக்குமென்றும் அவர் கூறினார்.

'மதுரை' 'மடுரை'தானும்!

—(0)—

வடநாட்டு யோசனைக்கு வளைந்து கொடுத்தது நகரசபை

மதுரை, மார்ச். 11—

மதுரை (Mathurai) என்றிருந்த இந்நகரின் பெயரை, மடுரை (Madhurai) என்று உத்தியோகப் பூர்வமாக மாற்றிவிட நகரசபை முடிவு செய்துவிட்டது.

வடநாட்டிலுள்ள 'மதுரா'வுக்கும், தென்னாட்டிலுள்ள 'மதுரை'க்கும் குழப்பம் ஏற்படக்கூடுமென இந்தியப்பிரதமர் பண்டிதநேரு கூறியதின் காரணமாகவே, இவ்வாறு முடிவு செய்யப்பட்டுள்ளதாகத்தெரிகிறது.

பர்ஸியாவின் வடகிழக்குப் பகுதியில் கம்யூனிஸ்டு

டெஹ்ரான், மார்ச் 12—

பர்ஸியாவின் வடகிழக்கு மாகாணங்களில் ரஷ்யாவை ஒட்டினாற் போலுள்ள பிரதேசத்தில், கம்யூனிஸ்டுகள் நடவடிக்கை அதிகரிக்க ஆரம்பித்திருப்பதால், அங்கு அநேகம் பேர் கைது செய்யப்பட்டிருக்கின்றனர். சில கம்யூனிஸ்டுகள் ரஷ்யாவிலிருந்து இப்பிரதேசத்தில் புகுந்திருப்பதாகத்தெரிகிறது. —குளோப்

கழக நடவடிக்கைகள்

பொன்மலை:—1—3—50 புதன் மாலை 7 மணிக்கு பொன்மலை திராவிடவாலிபர் கழகத் தோட்டத்தில் கழகத் தலைவர் தோழர் ஜி. பராங்குசம் தலைமையில் நிர்வாகக் கமிட்டி கூட்டம் நடைபெற்றது. அதுசமயம் கழக 9-வது ஆண்டு விழாவை இம்மாதம் மூன்றாவது வாரத்தில் நடத்துவது என்றும், மேற்படி விழாவிற்குத் தோழர்கள் சி. பி. சிற்றரசு, ஈ. வெ. கி. சம்பத், நரோடு அப்பாவு, டி. கே. சீனிவாசன் ஆகியவர்களை அழைப்பதென்று தீர்மானம் நிறைவேறிய பின் இனிது முடிந்தது.

* * *

மாயவரம்:—நகர திராவிட முன்னேற்றக் கழகக் கிளை செயற்குழுவினர் 5—3—50 ஞாயிறு மாலை 6 மணிக்கு தோழர் ஆர். பழனிச்சாமி அவர்கள் தலைமையில் கூடி, அடியிற்கண்ட தீர்மானங்களை நிறைவேற்றினர். சேலம் சிறையில் நடைபெற்றத் துப்பாக்கிப் பிரயோக சம்பவத்தை இச்செயற்குழு வன்மையாகக் கண்டிப்பதை அரசியலாருக்கு தெரிவித்துக்கொள்கின்றது.

மேற்படி கண்டனதீர்மானத்தை சென்னை முதல் மந்திரிக்கும், சிறை மந்திரி தோழர் மாதவமேனன் அவர்கட்கும், அஞ்சல் மூலம் அனுப்பப்பட்டது.

மேற்படி கொடுஞ் சம்பவத்தின் காரணமாய் உயிர் நீத்தவர்களின் குடும்பங்கட்கும் இச்செயற்குழுவினர் ஆழ்ந்த துக்கத்தைத் தெரிவித்துக்கொள்கின்றனர்.

அண்மையில் வங்கத்திலே தோழர் சரத்சந்திரபோஸ் மறைவெய்தியமைக்கும் வருத்த முறுவதுடன், அன்னார் குடும்பத்திற்கும் அனுதாபம் தெரிவித்துக் கொள்கின்றது.

26—2—50-ல் கலைவாணர் தோழர் என். எஸ். கே. அவர்கட்கு அளித்த தேநீர் விருந்துக்கும், வரவேற்புக்கும் செலவான ரூ. 6¼—11—0ஐ இச்செயற்குழு ஒப்புக்கொள்கின்றது.

செயற்குழு உறுப்பினர் என். சதாசிவம் அவர்கள் மூன்று கூட்டங்கட்கு வராதிருந்ததால் அன்னார் நீக்கப்பட்டு தோழர் ஆர். செயராமன் அவர்கள் செயற்குழு உறுப்பினராகச் சேர்க்கப்பட்டார்.

செயலாளர் நன்றி கூற கூட்டம் முடிவுற்றது.

* * *

சென்னை, ஓட்டேரி:— 5 3 50 ஞாயிறு காலை 9-30 மணிக்குக் கழகச் செயலாளர் தோழர் எ. சே. சாமி தலைமையில் சென்னை ஓட்டேரி திராவிடமுன்னேற்றக்கழகத்தின் செயற்குழு உறுப்பினர் கூட்டம் கழக மனையில் கூடியது. அது காலை சென்ற மாத வரவு-செலவுக் கணக்கு பரிசீலனை செய்து ஏற்றுக்கொள்ளப்பட்டபின், இரண்டு தீர்மானங்கள் நிறைவேறியது. தீர்மானங்கள் பின்வருமாறு:—

வைத்தியவள்ளல் பெரியார் ஈ. வெ. கிருஷ்ணசாமி அவர்கள் இயற்கை எய்தியதற்காக இக்கமிட்டி வருந்துவதுடன், அவர்தம் மனைவி மக்களுக்கும் அனுதாபத்தைத் தெரிவித்துக்கொள்ளுகிறது.

சேலம் சிறை காவலில் வைக்கப்பட்டிருந்த அரசியல் கைதிகளில் இருபத்திரண்டு பேர் ஆவியை சுட்டுக்கொன்ற அநீதியையும் அடாத செயலையும் இச் செயற்குழு வன்மையாகக் கண்டிப்பதுடன் எதிர்காலத்தில் இவ்வித அநியாய அடக்குமுறையைச் சர்க்கார் கையாள்வது கூடாது என்று இக்கூட்டம் சர்க்காருக்கும் அதிகாரிகளுக்கும் நினைவூட்டுகிறது. பின் தலைவர் முடிவுரைக்குப்பின் இளம் உறுப்பினர் தோழர் ஆர். டி. அரசு நன்றிகூற 10-30 மணிக்குக் கூட்டம் இனிது முடிவுற்றது.

பொன்னமராவதி:—4-3-50 இரவு 9-மணியளவில் தி. மு. வாலிபர் கழகச் செயற்குழு, செயலாளர் தோழர் அ.ச. பாலு தலைமையில் கூடி, வைத்தியவள்ளல் பெரியார் ஈ. வெ. கி. அவர்கள் இறந்தை எய்தியது கேட்டு வருந்தி, அன்னார் குடும்பத்தினருக்கும் குறிப்பாகத் தோழர் சம்பத் அவர்களுக்கும் ஆழ்ந்த அனுதாபம் தெரிவித்துக்கொள்வதாகவும், 'பொன்னி' உரிமையாளர் தந்தை தோழர் அருணாசலம் மறைவு குறித்தும், புதுக்கோட்டை முன்னாள் திவான் திருச்சி தோழர் கலிபுல்லா இறந்தமைக் குறித்தும், வங்க வீர தோழர் சரத்சந்திர போஸ் காலமானது குறித்தும் அன்னாருடைய குடும்பத்தினர்களுக்கு அனுதாபம் தெரிவித்துக்கொள்வதாகவும், சேலம் சிறையில் பொதுவுடைமைத் தோழர்களைச் சுட்டு வீழ்த்திய கோரச் சம்பவத்தை வன்மையாகக் கண்டிப்பதோடு, பகிரங்க விசாரணை மூலம் இதற்குக் காரணமானவர்களைத் தண்டித்து நீதி வழங்குமாறு சென்னை அரசியலாரைக் கேட்டுக்கொண்டும் ஒருமனதாகத் தீர்மானிக்கப்பட்டு நன்றிகூறலுடன் கூட்டம் முடிவுற்றது.

* * *

இடைக்காட்டூர்:—தி. மு. கழகச் செயற்குழுக் கூட்டம் 3-3-50 அன்று மாலை 4 மணிக்குத் தோழர் எம். அப்துல்வஹாப்ஜான் தலைமையில் கூடியது. அவ்வமயம் வைத்திய வள்ளல் ஈ. வெ. கிருஷ்ணசாமி அவர்கள் மறைவுக்கு ஆழ்ந்த அனுதாபம் தெரிவித்துக்கொள்ளப்பட்டது. கழகச் செயலாளர் கே. எம். செய்யது இப்ராஹிம் அவர்களின் ராஜினாமா ஏற்றுக்கொள்ளப்பட்டு மேற்படி கழகச் செயலாளராகத் தோழர் எம். அப்துல் வஹாப்ஜான் அவர்களைக் கழக அங்கத்தினர்களால் ஏகமனதாகத் தேர்ந்தெடுக்கப்பட்டு, செயலாளர் நன்றி கூறக் கூட்டம் இனிது முடிந்தது.

* * *

பொத்தனூர்(சேலம்):—பொத்தனூர் திராவிட முன்னேற்றக் கழகக் கிளையின் செயற்குழு 1-3-50 மாலை 5 மணிக்குத்தோழர் பி. கே. வேலாயுதம் தலைமையில் கூடியது. அதுபோழ்து கீழ்க்கண்ட தீர்மானங்கள் ஏகமனதாக நிறைவேறின.

1. சேலம் மாவட்ட திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு தோழர்கள் இரா. சகாதேவன், பி. கே. வேலாயுதம் ஆகிய இருவரை இக்கழகம் பிரதிநிதிகளாகத் தேர்ந்தெடுத்துள்ளது.

2. சேலம் சிறையில் சிறைப் படுத்தப்பட்டிருந்த அரசியல் கைதிகளில், 22 பேர்கள் உயிரிழக்கவும் 100-க்கு மேற்பட்டவர்கள் படுகாயமுறவும் ஆன கொடுமை நிகழும்படி, துப்பாக்கிப் பிரயோகம் நடத்திய செய்கை கண்டு இக்கழகம் அதாசீனமானது, அநீதியானது என்று கூறி அரசியலாரின் செயலைக் கண்டிக்கிறது.

* * *

சக்கரமல்லூர்:— 5-3-50 அன்று இரவு 8 மணிக்கு தி. கழக உறுப்பினர்கள் கூட்டம் நிதிஉறுப்பினர் தோழர் எம். விநாயகம் அவர்கள் இல்லத்தில் கூடி, கீழ்க்கண்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டது

பெரியார் ஈ. வெ. கிருஷ்ணசாமி அவர்களின் மறைவுக்கு ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக்கொள்கிறது.

சேலம் சிறையில் 11-2-50 ல் பாதுகாப்பு கைதிகளின்மீது நடந்த துப்பாக்கிப்பிரயோகத்தை இக்கூட்டம் வன்மையாகக் கண்டிக்கிறது.

தி. மு. கழகத்தில் உங்கள் பெயரை பதிவு செய்து கொண்டீர்களா?

இன்றேல் உடனே பதிவு செய்துகொண்டு உறுப்பினராகுங்கள்!

உறுப்பினராகக் கடைசி நாள்

13—3—50

அவசர வேண்டுகோள்

இதுவரையிலும் அங்கத்தினர்கள் சேர்ப்பதாக புத்தகங்கள் வாங்கிச்சென்ற கிளைக் கழகத் தோழர்கள் அடிக்கட்டைகளையும் பணத்தையும் எத்தனையோ தாங்கள் நேரிலேயே கொண்டுவந்து கொடுக்கவில்லை. 31-3-50-க்குள் தலைமைக் கழகத்திற்குக் கணக்கு அனுப்ப வேண்டியிருப்பதால், உடனேயே பணத்தையும், அடிக்கட்டைகளையும் அனுப்பிவைக்க வேண்டுகிறேன். 31—3—50-க்குள் கணக்கு அனுப்பவேண்டியிருப்பதால் புதிதாக எந்த ஊர்களுக்கும் புத்தகம் அனுப்பவில்லையென்று தெரிவித்துக்கொள்கிறேன்.

இப்படிக்கு
நா. ஆவடையப்பன்
செயலாளர்
மதுரை மாவட்ட தி. மு. கழகம்
சோழவந்தான்

குமாரமங்கலம்:—1-3-50 ல் இவ்வூரில் கூடிய தி. மு. க. செயற்குழுவினரால் கீழ்க்கண்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டது.

வைத்திய வள்ளல் பெரியார் ஈ. வே. கிருஷ்ணசாமி அவர்களின் மறைவுக்கு இக்கூட்டம் வருந்துவதுடன், அன்னாரின் குடும்பத்தினர்களுக்கு ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக்கொள்கிறது.

அண்மையில் 11-2-50 ல் சேலம் மத்திய சிறையில் கம்யூனிஸ்டு கைதிகளின் மீது அவசியமற்றும், நீதிக்கும், நேர்மைக்கும் மனித பண்புக்கும் புறம்பாக துப்பாக்கிப் பிரயோகம் செய்து 22 பேர் கொல்லப்பட்டும் நூற்றுக்கு மேற்பட்டவர்களைப் படுகாயப்படுத்திய சிறை அதிகாரிகளின் செய்கையை இக்கூட்டம் வன்மையாகக் கண்டிக்கிறது. சேலம் மாவட்ட கழகச் சார்பில் தோழர்கள் ம. முனியப்பன் அவர்களையும் ம. இராமசாமி அவர்களையும் தேர்ந்தெடுக்கப்பட்டது.

* * *

ஓ. செண்டலாம்பட்டி:— இக்கழகத்தின் செயற்குழுக் கூட்டம் தோழர் மு. ராமன் அவர்கள் இல்லத்தில் ஜி. கிருஷ்ணமூர்த்தி அவர்கள் தலைமையில் கூடியது. பின் பல தோழர்கள் இயக்கத்தை விளக்கிப்பேசினர். பின்கீழ்கண்ட தீர்மானங்கள் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டன.

1. வைத்திய வள்ளல் ஈ. வே. கிருஷ்ணசாமி அவர்கள் மறைவுக்கு இக்கூட்டம் அநுதாபத்தைத் தெரிவித்துக் கொள்கிறது.

2. சேலம்மாவட்ட அமைப்புக் கூட்டத்திற்குத் தோழர் கே. எம். கோவிந்தராசனையும், கே. எஸ். அமிர்தம் அவர்களையும் அனுப்ப முடிவு செய்யப்பட்டது.

3. நிர்வாகக் குழு உறுப்பினர்களிடமிருந்து மாதம் 1-க்கு 0 4 0 சந்தா வசூலிக்கத் தீர்மானிக்கப்பட்டது.

பின் செயலாளர் நன்றி கூறக் கூட்டம் இனிது முடிந்தது.

தி. மு. கழகப் பொதுக்கூட்டங்கள்

சத்தியமங்கலம்

சத்தியமங்கலம், மார்ச் 6— நேற்று மாலை 7-மணிக்கு சத்தியமங்கலம் திராவிட முன்னேற்றக் கழகத் துவக்கவிழாப் பொதுக்கூட்டம், குமான் மன்ற மைதானத்தில் நடைபெற்றது. தோழர் கே. சிவக்கொழுந்து அவர்கள் கூட்டத்திற்குத்தலைமை வகித்து, திராவிட முன்னேற்றக் கழகம் ஏற்படவேண்டிய அவசியத்தைப் பற்றிப் பேசிவிட்டு, வேலூர் தோழர் சி. பி. சிற்றரசு அவர்களைப் பேசவேண்டுமெனக் கேட்டுக்கொண்டார்.

கைத்தட்டலுக்கிடையே தோழர் சி. பி. சிற்றரசு பேச ஆரம்பித்தார். அவர் பேசுகையில்:—தி. மு. கழகம் தோன்ற வேண்டிய அவசியம் பற்றியும், சேலம் சிறைச் சம்பவம் பற்றி தி. மு. க.வின் நோக்கம் பற்றியும், அரசியல் என்றால் எப்படி இருக்கவேண்டும் என்பது பற்றியும், எதிர்க்கட்சிகள் இருக்க வேண்டிய அவசியம் பற்றியும், திராவிடம் ஏன் தனியாக வாழமுடியாது என்றும், இன்றைய அரசியல் நிலை எப்படி இருக்கிறது என்றும், இன்றைய காங்கிரஸ் ஆட்சியில் உள்ள ஊழல்கள் பற்றியும், அனைவரும் தி. மு. க.வில் சேர்ந்து பணியாற்றவேண்டுமென்று மிக அழகாக சுமார் 2-மணி நேரம் பேசினார். அதன்பின் எஸ். ஜி. கண்ணப்பன் சேலம் சிறைச் சம்பவம் பற்றிக் கண்டித்துப் பேசினார். பின் தலைவர் நன்றி கூறக் கூட்டம் 9-30 மணிக்கு இனிது முடிந்தது.

(சி. உ.)

சோழமூர்

குடியாத்தம் தாலுகா சோழமூர் கிராமத்தில் 24—2—50 வெள்ளிக்கிழமை மாலை 5 மணிக்குத் தோழர் க. முனிசாமி அவர்கள் தலைமையில் ஒரு பொதுக்கூட்டம் நடைபெற்றது. முதலில்தோழர்வேலு-வில்லவன் தி. மு. க. குறிக்கோளையும் இன்றைய அரசியலின் நிலையைக் குறித்தும் அரியதோர் சொற்பொழிவாற்றினார்.

அடுத்துத் தோழர் வே. அ. இளஞ்செழியன், பார்ப்பனியத்தைக் கண்டித்தும், அரசின் இட்டங்களைக் கண்டித்தும், விவசாய அபிவிருத்திகளைக் குறித்தும், பேசினார்.

அடுத்துத் தோழர், காஞ்சி சமதர்ம சாஸ்திரி இ. கே. குப்புசாமி அவர்கள் சேலம் சிறை நிகழ்ச்சியைக்கண்டித்தும், கிராம முன்னேற்றங்களை பற்றியும், பேசினார்.

அடுத்துத்தோழர் பசுலுல்லா, திராவிட நாடு தனித்தியங்க வேண்டியதன் அவசியத்தை எடுத்துக் கூறினார்.

கடைசியாகத்தோழர் சி.பி.சிற்றரசு அவர்கள், மக்கள் முன்னேற்றத்தின் அவசியத்தையும், திராவிட நாடு தனித்து இயங்க வேண்டியதன் அவசியத்தையும், இன்றைய அரசியலாரின் போக்கையும், தெளிவாக சுமார் ஒரு மணி நேரம் பேசினார்.

தோழர் இராசகோபலன் நன்றி கூற கூட்டம் 8-30 மணிக்கு இனிது முடிந்தது.

அங்கலக்குறிச்சி

அங்கலக்குறிச்சி, மார்ச். 8— 7-3-50 செவ்வாய் மாலை 8 மணிக்கு தி. மு. கழகத் துவக்க விழாப் பொதுக்கூட்டம் மிகச் சிறப்பாக நடைபெற்றது. கோட்டூர், ஆனைமலை, வேட்டைக்காரன்புதூர் முதலிய ஊர்களிலிருந்து இயக்கத் தோழர்களும், பொதுமக்களும் ஏராளமாக வந்திருந்தனர். எங்கு பார்த்தாலும் இயக்கக் கொடிகள் பறந்து கொண்டிருந்தன. கூட்டத்திற்கு, உடுமலைப்பேட்டை நகரசபைத் தலைவர் தோழர் எம். எஸ். கனகராசன் அவர்கள் தலைமை வகித்து, தி. மு. கழகத்தின் நோக்கத்தைப்பற்றியும், நாட்டுப் பிரிவினையின் அவசியத்தைப்பற்றியும், கட்டாய இந்தியை ஒழிக்கவேண்டியதைப்பற்றியும் மிக விரிவாகப் பல எடுத்துக் காட்டுடன் விளக்கிப் பேசினார்.

வேலூர் தோழர் சி. பி. சிற்றரசு நீண்ட தம்சொற்பொழிவில் ஆரியத்தால் நாட்டு மக்கள் அடைந்த இழிநிலை பற்றியும், மக்களை மதிக்காமல்—துணை கொள்ளாமல், துப்பாக்கியின் துணையை நம்பி நாட்டை ஆளநினைக்கும் அமைச்சர்கள் இறுதியில் மக்கள் மன்றத்தால் மதிக்கப்படாத நிலைமைக்கு வந்து அடைவார்கள் என்றும், சேலத்தில் சிறை அதிகாரிகளால் சுட்டுக் கொல்லப்பட்ட பரிதாபத்தைப்பற்றியும், மக்களுடைய முன்னேற்றத்திற்கு முட்டுக்கட்டையாக விளங்கும் மத-மூடநம்பிக்கைகளைப்பற்றியும், காங்கிரஸ்காரர்களின் ஆணவப்போக்கைப்பற்றியும், ஊழல் மிகுந்த ஆட்சியின் தன்மையைப்பற்றியும், பாட்டாளி மக்களின் பரிதாப வாழ்க்கையைப்பற்றியும் அவர்தம் குறைகளை நீக்கவேண்டிய அவசியத்தைப்பற்றியும் விளக்கி சுமார் 2 மணி நேரம் மிக அழகாகச் சொற்பொழிவாற்றினார்.

அடுத்துத் தோழர் பொன்னமராவதி பி. என். இராமானுசம் அகிம்சை வாதிகளின் ஆட்சியில், சேலம் மத்திய சிறையில் பாதுகாப்பிலிருந்த 22 கம்யூனிஸ்ட் கைதிகளை ஈவு இரக்கமற்ற முறையில் சுட்டுக்கொன்றதைப்பற்றியும், நூற்றுக்கு மேற்பட்டவர்கள் குண்டடிப்பட்டு வேதனைப்பட அனுபவித்துக் கொண்டிருப்பதையும் எடுத்துக் கூறி,

"சேலம் சிறையில் பாதுகாப்பில் வைக்கப்பட்டிருந்த பாதுகாப்புக் கைதிகளைத் துப்பாக்கியால் சுட்டு, 22 பேர்களைக் கொன்றதோடு, நூற்றுக்கு மேற்பட்டவர்களைக் காயப்படுத்திய சிறை அதிகாரிகளின் செய்கையை இக்கூட்டம் வன்மையாகக் கண்டிக்கிறது"

என்ற தீர்மானத்தை முன்மொழிந்தார். தோழர் ஏ. கே. பழனிசாமி வழிமொழியத் தீர்மானம் ஏகமனதாக நிறைவேறியது. தலைவர் முடிவுரைக்குப்பின் செயலாளர் பழனிசாமி நன்றிகூறக் கூட்டம் கலைந்தது.

அலங்கார அரசியல்வாதிகளால்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

யில் கண்டு வருகிறோம். 'இரு வேறு உலகத்தியற்கை, திரு வேறு தெள்ளியராதலும் வேறு' என்றார் அறம் வகுக்க வந்த வள்ளுவர். அப்பொய்யா மொழிக்கேற்பவே, இன்று டாலர் ஏகாதிபத்திய டண மூட்டை அமெரிக்காக்களும், சமத்துவ சமதர்ம அறிவாட சி நாடுகளும் இருவேறாகப் பிரிந்து தங்கள் தங்கள் இலட்சிய ஈடேற்றத்துக்கு மார் தட்டி நிற்கின்றன. பணம்—பாக்கியம்—ஆட்சி—அதிகாரம் இன்னபிற வேறு: அறிவு-அன்பு—நேர்மை—நல்லெண்ணம் வேறு; இரண்டும் இணைவது அத்துணை சாத்தியமன்றென்று வரையறுத்துரைந்து போகிய அரும் பெருங்கோட்பாட்டு அறிவுப்புலவர் வள்ளுவர் வாய்மொழியை மெய்ப்பிக்கும் வகையில் உலகவல்லரசுகள் இருபெருமுகாம்களாக முன்னணி வகுத்து நிற்பதைக் காண்கிறோம். உரிமைகள்—சலுகைகள்—போக போக்கிய ஆடம்பர நல்வாழ்வு வசதிகள் ஒரு சிலருக்கே ஏகபாகமாகவிருந்துவரவேண்டுமென்ற உலுத்த லட்சியத்துக்கு வாதாடும் சுரண்டல் முகாம் ஒரு புறம்—மனிதன் வாழப் பிறந்தான், சாவ அல்ல; செம்மை வாழ்வைச் சிறப்புடன் வகுத்துக்கொள்ள அவனுக்கு அனைத்து உரிமையும் திறமையுமுண்டு; அவனது முயற்சியைக் குலைக்கக் கருதும் சக்திகள் எத்துணை மகத்தான வல்லமை கொண்டவையாயினும், அவை தகர்ந்து தூளாவது திண்ணமெனதிட சங்கல்பம் கொண்டிருக்கும் முகாம் ஒரு புறம். இவ்விரு வேறு முகாம்களும் இன்று உலகைப் போர்ப் பாதை நோக்கி இட்டுச் செல்லுதைத் தெரிகிறோம்.

அரசியல்வாதிகள் சாதிப்பதென்ன?

வேட்டுத் துப்பாக்கிக்கும் விஷப்புகைக்கும் அன்றிருந்த சட்ட லாட்டம் இன்று அணுக்குண்டு ஹைட்ரஜன் பாம்புகளுக்கிடையே ஏற்பட்டிருப்பதைக் காண்கிறோம். அணுக்குண்டு பெயரைசசொல்லி மிரட்டியே அகில உலகையும் கட்டியாள நினைத்த அமெரிக்கா, இன்று எதிர்முகாமின் அணுக்குண்டு பலங்கண்டு கதிகலங்கி அணுகுண்டு படையெடுப்பைச்சமாளிப்பதற்கான பெருஞ்செலவு பட்ஜெட்டைத் தீட்டி விட்டதைத் தெரிந்திருக்கிறோம். இவ்வண்ணம் உலக மனிதனின் எதிர்காலம் ஊசலாடுகிறது வல்லரசுகள் கையில்!

நாட்டு மக்களின் நலிவு தீர்ப்பதில் நாட்டமோ, நல்லெண்ணமோ தினைத்துணையுமில்லாமல், அவர்கள்தம் ஆசை-விழைவுகள் எவையெவை யென்பதை அறிய மறுத்து, நியாயமான உரிமைக் கோரிக்கைகளுக்கும் செவி சாய்க்க சம்மதியாது, நாற்காலி சேரில் அமர்ந்தே அரசியல் தத்துவ நூல்களை வால்யூம்—வால்யூமாக பனப்பாடஞ் செய்யும் அரசியல்தபோதனார்கள் உலகவாழ்வை அதன் உறுதியை — வளத்தை உள்ளபடியே நிலையற்றதாக்கி வருகின்றனரென்பதை யாரே மறுக்க முடியும். தேசியம்—சர்வ தேசியம்—ஒருலக சர்க்கார் என்று படிப்படியாகப் படித்தத் தத்துவங்களுக்கேற்ப—தங்களது அரசியலறிவு முதிர்ச்சிக்கேற்ப—உலகை முனையிலேயே முற்றவைக்கப் பார்க்கின்றனர். இது அவர்களது உல்லாச வாழ்க்கையை பொட்டியெழும் அரசியல் பகற்கனவாகவே என்றென்றும் இருந்து வருவதைக் காண்கிறோம். உலக நாடுகளனைத்தையும் ஒரு குடைக்கீழ்க்கொணர வேண்டும், அப்படி ஒன்று சேர்ந்த நாடுகளின் வளத்தை—வாழ்வை—உரிமையை—இன்னும் எவ்வெவை — அவையனைத்தையும் சுரண்டி சுகபோகத்திலாழவேண்டும்—அதே நேரத்தில் முதலாளித்வ பதேச்சாதிகாரம் முனைப்புப் பெற்று சிரஞ்சீவியாய்த் திகழ்ந்து வரல்வேண்டுமென்ற பத்தாம் பசலிக் கொள்கையைப் பகட்டாக மனதிற்கொண்டு — தங்களது மனோரத வெற்றி யோட்டத்துக்கான வெறியாட்டங்களையெல்லாம், மேற்கத்திய வல்லரசுகள் ஈடுபட்டு வருதலைக் காண்கிறோம். முதலாளித்துவ வல்லரசுகள் லேசென்சோடு சுரண்டல் திருவிளையாடல்கள் நடத்த அமைக்கப்பெற்ற அனுமதி நிலையமாகிய ஐ. நா. ஸ்தாபனம், இன்று ஆட்டங் கொடுத்து, அழிவை நோக்கிவிரைவதையுணர்கிறோம். பணபலத்தால்—ஏகாதிபத்திய இச்சகவுரைகளால் உலகையே மடக்கிக் கொள்ளலாமெனக் கருதி—திட்டம் போட்டு—செயலிலிறங்கியஆங்கிலோஅமெரிக்க வல்லரசுகள் இன்று ஐ.நா.வை பழைய சர்வதேச சங்கமாக்கி விட்டதோடு — வேண்டாத வேதனைச் சுழலில் சிக்கிக் கொண்டதை உண்மைநடப்பு எடுத்துக் காட்டி வருகிறது. சர்வதேச அரசியல் இவ்வண்ணம் சந்தைக்கடை வியாபாரமாகி விட்டதை — சூழ்க்காரர்களின் சட்டலாட்டக்கூடமாகி விட்டதை யார்தான் மறுக்க முடியுமெனக் கேட்கிறேன்."

தேசீயம் செல்லும் பாதை......

இந்த நிலையில் இந்தியா குடியரசு நாடெனக் கூறப்பெற்று, பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது. இவ்வுபகண்ட எல்லையை விடுத்து, அந்நியன் வெளியேறி விட்டானென்று பிரமாதப்படுத்தப்பட்டாலும் ஆங்கிலோ-அமெரிக்க ஏகாதிபத்திய இரும்புப் பிடிப்பிலிருந்து எந்த அளவுக்கும் இந்தியா விடுதலை பெறவில்லையென்பதை, சாதாரணவரும் அறிந்து கொள்ளும் நிலை இருந்து வருவதைக் காண்கிறோம். லண்டனும், வாஷிங்டனும் புதுடெல்லியின் போக்கைக் கட்டுப்படுத்தக் கூடிய துர்ப்பாக்கிய சுதந்திரக் குடியரசுத் திணிக்கப்பட்டிருக்கிறது இவ்வுபகண்ட மக்கள் மீது! மகிழ்ச்சி தாத்தக்கதல்லாத இக்கூட்டுறவை மேற்கத்திய வல்லரசுகள் மட்டில பெருமையுடன் மகிழ்ந்து விரும்பி நிற்கின்றன. இந்தியாவும் இதனைக் கிடைத்தற்கரிய பேறாகவே கருதி மகிழ்ந்து வருகிறது. இந்தியப் பெரு முதலாளிகளும் பணப்பெருச்சாளிகளும் தங்களது சொந்தமான ஏகபோக சுரண்டலுக்கு மக்கள் பெயரைச் சொல்லி, தண்ணீர் விட்டு வளர்த்து வந்த தேசிய ஸ்தாபனம்—உலகின் பல்வேறு பகுதிகளில் தேசிய ஸ்தாபனங்கள் பற்பல சென்றபாதையிலேயே விரைந்து செல்கிறது. ஆங்கிலோ—அமெரிக்கச் சுழலிலிருந்து இவ்வுபகண்டத்தை விடுவிபதற்கான திறனும், தெளிவும் தேசியத் தலைவர்களெனப் படுவோர்க்கு இல்லையென்பது ஒருபுறமிருப்பினும் அச்சுழலினின்று கழன்று கொண்டால் தங்கள் நிலை கரைபட்ட மீன் (Fish out of Water) போல் ஆகிவிடுமோவென அஞ்சி, தங்களது சொந்த நலன் எதிர்காலம் ஆகியவற்றைக் கருதி ஏகாதிபத்திய பிரிட்டனையும், முதலாளித்வ அமெரிக்காவையும் முதலைப் பிடியாகப்பற்றி நிற்கின்றனர். தேச மக்கள் விடுதலைக்கு—ஜனநாயகம் மலர்ச்சிக்குப் பாடுபட்டதாகக் கூறிக் கொண்ட இந்நாட்டு சுயராஜ்யத்தலைவர்கள் இவ்வண்ணம் முதலாளிகள் சுபீட்சத்துக்கும் பணநாயகப் பித்தலாட்டங்களுக்கும் பாடு படவும், பக்க மேளமடிக்கவும் வேண்டிய பரிதாப நிலைக்கு வந்துவிட்டனர். முதலாளிகளால் முதலாளிகளின் நலத்துக்கென நடத்தப் பெறும் தேசிய ஸ்தாபனமொன்றின் போக்கு இப்படித்தானிருக்க முடியுமென உலக வரலாற்றேடுகள் நமக்குஎடுத்துக் காட்டியிருக்கின்றன. சீனாவின் தேசிய கூமின்டாங் ஸ்தாபனம் உள்ளங்கை நெல்லிக்கனி யொத்ததொரு சான்றாகத் திகழ்வதையும் தெரிந்திருக்கிறோம்,

(தொடர்ச்சி நாளை வரும்)

அதிக பங்கு கோரிய விவசாயிகள் கைது!

அனைவரும் ஜாமீனில் விடுதலை

தென்காசி, மார்ச். 12—

நெல்லை மாவட்டம் அரியநாயகபுரம் கிராமத்தில் விவசாயிகளுக்கு அதிக பங்கு கோரி கிளர்ச்சி செய்ததாக, ஜில்லா விவசாயப் பஞ்சாயத்துத் தலைவர் தோழர் பொன்னம்பலம், பஞ்சாயத்துக் காரியதரிசி தோழர் ஹமீதா சுப்பிரமணியம், முத்து பாண்டியன் மற்றும் 6 விவசாயிகள் ஆகியோர் சென்ற வாரம் கைது செய்யப்பட்டனர். டி தோழர்கள் நேற்று மாலை தென்காசி சப் ஜெயிலிருந்து ஜாமீனில் விடுதலையானார்கள் 21-3-50 அன்று இவர்கள் சேர்மாதேவியில் விசாரிக்கப்படுவர்.

நாளுக்கு ஒரு குழந்தை!

அமெரிக்காவில் நடந்த அதிசயப் பிரசவம்

நியூயார்க், மார்ச். 12—

லூசியானாவில் ஜோன்ஸ்வில்லி என்ற கிராமத்தில் ஒரு செம்படவமாது ஒரு நாளைக்கு ஒரு குழந்தையாக மூன்று குழந்தைகளைத் தொடர்ந்து பிரசவித்திருக்கிறார்.

புதனன்று பிறந்த பையன் 5 பவுண்ட் எடையும் வியாழனன்று பிறந்த பெண் 6 பவுண்டும் வெள்ளியன்று பிறந்த பெண் 7 பவுண்டும் எடை இருக்கின்றனவாம். இரட்டைக் குழந்தைதான் பிறக்கும் என்று அவள் கணவன் எதிர்பார்த்தானாம். மருத்துவ சரித்திரத்திலேயேஇம்மாதிரிபிரசவம்இதுதான் முதல்தடவையென்றுகூறப்படுகிறது.

வெளிவந்துவிட்டது!

கொலைகாரி

தீட்டியவர்: ஆசைத்தம்பி

இதில் சித்தரிக்கப்பட்டுள்ள குமுதம், கருப்பி, ஆழ்வார், செட்டியார், தியாகராஜன், கோவிந்தன் முதலியவர்கள், தங்களுடைய வாழ்க்கைப் படகு கற்பாறையில் மோதுண்டு, சிதறிய வேதனை நிறைந்த வரலாறுகளை உங்களிடம் சொல்லுவார்கள். படிக்கப் படிக்க அலுப்பே தட்டவில்லை!

★

நிறைந்த பக்கங்கள்

விலை 0—12—0

மேலட்டை மூன்று கலரில் மிகப் பொலிவுடன் திகழ்கிறது

வியாபாரிகட்குத் தக்க இலாபமுடன் எங்கள் செலவிலேயே அனுப்பிவைக்கப்படும்

விலைப் பட்டியலுக்கு எழுதவும்

விவரங்கட்கு:—

திராவிடன் பதிப்பகம்,

P. B. No. 18, :: வேலூர் N. A.

முதலாளித்துவப் போக்கே போருக்கு வித்து

அமைதி காக்க மலட்டோவின் ஆவல்!

மாஸ்கோ, மார்ச். 10—

முதலாளித்துவம் வளர வழியிருக்கும் வரை, யுத்தப பயங்கரம் இருந்தே தீரும்; மற்றொரு போர் ஏற்படாதிருப்பதற்கான வழிகளை, சமாதானம் விரும்பும் தலைவர்கள் செய்யவேண்டும்;' என்று இரஷ்ய உதவிப்பிரதமர் மலட்டோவ் இன்றுகுறிப்பிட்டார்.

அவர் மேலும் பேசுகையில் குறிப்பிட்டதாவது:- முதலாளி வர்க்கத்தார் அணுக்குண்டையும், ஹைட்ரோஜன் குண்டையும கொண்டுமிரட்டி வருகின்றனர். சோவியத் மக்கள் தங்களுடைய நேரத்தை வீணாக்கமாட்டார்கள். அதே நேரத்தில் அணுசக்தியின் ரகசியத்தையும் தொற்கடித்தே தீருவர் என்பதை அவர்கள் மறந்துவிட்டனர். சோவியத் யூனியன் முதலாளித்துவம், பொது உடமை ஆகிய இரண்டுடனும் நட்பு முறையில் நம்பிக்கைக் கொண்டுள்ளது. சோவியத்யூனியன் நீண்டதொரு சமாதானத்தை நிலை நாட்டப்பெரிதும் ஆர்வமுள்ளதாயுள்ளது.

பெங்களூரில் கே.ஆர்.ஆர். நாடகசபா

பெங்களூர், மார்ச் 10—

தோழர் கே. ஆர். இராமசாமியின் கிருஷ்ணன் நாடக சபையினரால், நடத்திவரும் 'துளி விஷம்' என்ற நாடகத்திற்கு, 6—3—50-ல் தோழர் சி.என். அண்ணாதுரை எம்.ஏ, அவர்கள் தலைமை தாங்கினார். தோழர் ஈ. வெ. கி. சம்பத் அவர்களும் கலந்துகொண்டார்கள். தோழர் கே. ஆர். ராமசாமி அண்ணாத்துரை அவர்களை மாலை அணிவித்து வரவேற்றார்.

தோழர் அண்ணாத்துரை தனது தலைமையுரையில் 'காடு செழிக்க சீர்திருத்த நாடகங்கள் தேவை' என்றும் நடிப்புப் புலவர் கே. ஆர். ஆர். அவர்களால் நடத்தப்படும் நாடகங்களுக்கு மக்கள் அமோக ஆதரவு அளிக்கும்படியும் பேசிமுடித்தார்.

தோழர்கள்அண்ணாத்துரை, சம்பத், கே. ஆர். ஆர். ஆகிய மூவருக்கும் கன்னட மத்திய மாவட்ட திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பிலும், பெங்களூர் அறிவாலயம் சார்பிலும் மலர் மாலைகள் அணிவிக்கப்பட்டது. (ந-நி)

Printed & Published by T. M. Parthasarathy at the Mercantile Press, 2/45, Muthumari Chetty Street, Madras-1